# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.138/2017 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 01 ( PW- 01 ) |
| பெயர் | :- | சிவசக்தி கணேசன் த/பெ. இராஜேந்திரன் |
| தேதி | :- | 10-03-2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**01 முதல் 07 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தாயார் பெயர் உமா. கு.சி. வெங்கடாசலம் என்பவர் எனக்கு தந்தை வழி பாட்டனார். எனது தகப்பனார் பெயர் இராஜேந்திரன். அவர் இந்த வழக்கில் 03-ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். கு.சி.வெங்கடாசலம் 2008-ஆம் ஆண்டே இறந்துவிட்டார். 02-ஆம் வாதிக்கு 25 வயது.

கு.சி. வெங்கடாசலத்திற்கு என் தகப்பனாரும் சேர்ந்து 04 மகன்கள். அவருக்கு 01 மகளும் உண்டு. இந்த வழக்கின் 02-ஆம், 03-ஆம், 04-ஆம் பிரதிவாதிகள்தான் என் தகப்பானரின் சகோதரர்கள். என் தகப்பனார் எங்களோடு வசிக்கிறாரா என்றால் இல்லை. அவருடைய தாயாருடன் வசிக்கிறார். என் தகப்பனார் ஏன் எங்களோடு வசிக்கவில்லை என்றால் நான் சிறுவனாக இருக்கும்போது இருந்தே என் தகப்பனாரும் என் தாயாரும் கருத்து வேறுபாடால் பிரிந்து இருக்கின்றனர். என்ன கருத்து வேறுபாடு என்று என்னால் சொல்ல முடியாது. என் தகப்பனாரும் தாயாருக்கும் இடையே மனமுறிவு ஆகவில்லை என்றால் சரிதான். எனக்கு கடந்த வாரம்

திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமண அழைப்பிதழ் உள்ளது. என் தகப்பனார் பெயரில் திருமண பத்திரிக்கை உள்ளது என்றால் சரிதான்.

என் தகப்பனாருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை நடந்துவிட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் என் தகப்பனாருக்கு சொத்து ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில்தான் நான் பாகம் கேட்கிறேன் என்றால் சரிதான்.

நான் பாகம் கேட்கும் சொத்துக்கள்  கு.சி. வெங்கடாசலம் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரிதான். அவர் குஞ்சாண்டியூரில் இருந்து சேலத்திற்கு வந்து சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரிதான். வீட்டு மனை வணிகமும் கல் குவாரி வைத்திருந்தார் என்றால் சரிதான். கு.சி. வெங்கடாசலத்திற்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் இடையே நடந்த பாகப்பிரிவினைகள் அவரவருக்கு ஒதுங்கிய சொத்தை அவரவர் அனுபோகம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். என் தகப்பனாரின் சகோதரர்கள் என் தகப்பனாருடன் பொது குடும்பமாக இல்லை என்றால் சரிதான்.  கு.சி. வெங்கடாசலத்தின் சொத்து ஏதேனும் இன்னும் பிரிக்கப் -படாமல் உள்ளதா என்றால் இல்லை. பாட்டியின் சொத்து பிரிக்காமல் உள்ளது.

பாட்டியின் பெயர் இந்திராணி. அவருடைய சொத்து சேலம் 5 சாலை பகுதியில் உள்ளது. அந்த சொத்தை இந்திராணி கிரயம் வாங்கினாரா என்றால் அது எனக்குத் தெரியவில்லை. அந்த சொத்துக்களை இந்திராணி

அனுபோகம் செய்கிறார் என்றால் சரிதான். அந்த சொத்திலும் இந்த வழக்கில் பாகப்பிரிவினை கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

ஏற்கனவே என் தகப்பனாருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை நடந்துவிட்ட நிலையில் அந்த பாகப்பிரிவினை -யில் என் தகப்பனாருக்க ஒதுங்கிய சொத்தில்தான் நான் பாகப்பிரிவினை கோர முடியும் என்றும் மொத்த சொத்தையும் சேர்ந்து நான் பாகப்பிரிவினை கோர முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. இந்திராணியின் சொத்தில் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

**26, 27, 28—ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்குச் சொத்துக்களின் புல எண் விவரங்கள் எனக்கு தற்போது நினைவில்லை. இந்த பிரதிவாதிகள் பதிவு சட்டத்தின்படி தன்னிச்சையாக செயல்படக் கூடிய அதிகார அமைப்பு என்றும் பதிவுசெய்யக்கூடாது என்று அவர்களுக்கு எதிராக உரிமை வழக்கு தொடுத்து நிவாரணம் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு இந்த பிரதிவாதிகள் அவசிய தரப்பினரோ தேவையான தரப்பினரோ இல்லை என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.